IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)
An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# ஐங்குறுநூற்றில் நில வளங்கள்

**செல்வி.நா.நதியா**
**214901 TR 005**
முதுகலைத் தமிழ் இலக்கியம் இரண்டாம் ஆண்டு
சக்தி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஒட்டன்சத்திரம்
திண்டுக்கல் – 623614

**முனைவர்.நா.முருகேஸ்வரி, எம்.ஏ., பி.எட்., எம்.பில்., பி.எச்டி**
தமிழ்த்துறை தலைவர்
சக்தி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஒட்டன்சத்திரம்
திண்டுக்கல் - 623614

**முன்னுரை**

சங்க எட்டுத்தொகை நூல்கள் அனைத்தும் தொகுக்கப்பட்டனவாகவே அமைகின்றன. ஒவ்வொரு நூலுக்கும் தனித்த சிறப்புகள் பல காணப்படுகின்றன. ஐங்குறுநூறு பாடல்களைப் பாடியோர் ஐவர் ஆவர். ஐந்து திணைகளில் குறுகிய அடிகளை உடைய நூறுபாடல்கள் என்ற பொருள்பட ஐங்குறுநூறு என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்நூலைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார். தொகுப்பித்தவர் யானைகட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை. மருதத்திணையை முதலாக வைத்து இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆசிரியரும் **100** பாடல்கள் இயற்றியதை ஆராய்ந்த அறிஞர் கார்மேகக் கோனார், “இந்நூலைத் தொகுத்த ஆசிரியர் இத்தகைய நூலொன்றை உருவாக்க வேண்டுமென்று முன்னரே தம்முள்ளத்துட்கொண்டு ஐந்திணைகளில் எவ்வெத்திணையை எவ்வெப்புலவர் பாடுவதில் வல்லுநர் என்பதனை ஆராய்ந்து அவ்வப்புலவர்களை அணுகி பாடல் இயற்றச்செய்து அவர்கள் புதிதாகப் பாடித் தந்தவற்றைக் கொண்டே இவ்விதம், இந்நூலைத் தொகுத்தனரோ என்றுக் கருதுவதற்கும் இடமுண்டு”[1] என்று ஐங்குறுநூற்றுச் சொற்பொழிவுகள் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

**நிலப்பிரிவுகள்**

தமிழ்நாட்டின் நிலம் நான்காக பிரிக்கப்படுகின்றன. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், என்று இதனைத் தொல்காப்பியர் பாகுபடுத்துகின்றார்.

***“மாயோன் மேய காடுறை உலகமும்***
***சேயோன் மேய மைவரை உலகமும்***
***வேந்தன் மேய தீம்புணல் உலகமும்***
***வருணன் மேய பெருமணல் உலகமும்***
***முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல்எனச்***
***சொல்லிய முறையான் சொல்லவும் படுமே”[2]***

என்ற நூற்பா மூலம் நிலத்தின் பிரிப்பு முறை சுட்டப்படுகின்றது.

தொல்காப்பியர் முதலில் முல்லை நிலத்தையும் பிறகு குறிஞ்சி, மருதம், நெய்தல் என்று வகைப்படுத்தியுள்ளார்.

பாலைக்கு தனிநிலம் இல்லை. ஆனால் முல்லையும், குறிஞ்சியும் முறைமையில் திரிந்து பாலையாக உருமாறியது என்று இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் கூறுகின்றார்.

***"முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து***
***பாலை என்பதோர் படிவம் கொள்ளும"[6]***

என்ற பாடலடியில் பாலை நிலம் பற்றி குறிப்பு இடம்பெறுகின்றது.

**நில வளங்கள்**

சங்க காலத்தில் நிலங்கள் வளத்துடனும் நலத்துடனும் இலங்கின. இயற்கை சார்ந்த வேளாண்மை மண்ணில் மேற்கொள்ளப்பட்டன. குறிஞ்சி மலைப்பகுதிகளில் காட்டெரிப்பு வேளாண்மை செய்யப்பட்டன. மானுட வாழ்விற்குத் தேவையான உணவுப்பொருட்கள் மண்ணிலிருந்தே(நிலம்) கிடைக்கின்றன. புவியின் பரப்பில் நான்கில் ஒரு பங்கு நிலமாகும். சங்ககால புலவர்கள் தமிழ் நிலத்தை ஐந்து வகையாகப் பிரித்துள்ளனர். இத்தகைய நிலத்தில் இருக்கும் மலைகள், கற்கள், பாறைகள், குன்றுகள், மண் வகைகள் பற்றி இவ்வியல் ஆராய்கிறது.

**ஐங்குறுநூற்றில் நிலங்கள்**

ஐங்குறுநூற்றில் நிலங்களில் இருக்கும் மண்இ மலைஇ குன்றுஇ கல்இ பாறைகள் போன்ற நிலம் சார்ந்த குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

**மருதநில மண்**

மருத நிலத்தில் மணல் திட்டுகள் நிறைந்து இருப்பது கூறப்படுகின்றது. இத்தகைய திட்டில் மாமரங்கள் நிற்கும். அம்மரத்தின் கிளைகள் பெரிதாக இருக்கும். இச்செய்தியை கீழ்க்காணும் பாடலடி பதிவு செய்கின்றது.

***"எக்கர் மாஅத்துப் புதுப் பூம் பெருஞ்சினை,***
***புணர்ந்தார் மெய்ம் மணம் கமழும் தண்பொழில்"[7]***

என்ற பாடலடியில் மருதநில எக்கர் மணல் திட்டில் மாமரங்கள் செழிப்புடன் இருப்பது காட்சிப்படுத்தப்படுகின்றது.

**நெய்தல் நிலம்**

நெய்தல் நிலம் - கடலும் கடல் சார்ந்த பகுதியாகும். இந்த நிலங்களில் கடல் மணல் பற்றிய குறிப்புகள் மிகுதியாகும். குவிந்த மணல், வெண்மையான மணல், மணல் பாவை, நீண்ட மணல் பரப்பு, மணல் மேடு, மணல் முற்றம், மணலில் மரங்கள் கரிய மணல், வண்டல் மண் போன்றவை நெய்தல் நிலத்தில் இருக்கும் பல்வேறு மண்வகைகள் ஆகும். ஒவ்வொரு நிலத்திற்கு ஏற்ப அதன் நிறம்இ அதன் தன்மை மாற்றம் பெறுகிறது.

நெய்தல் கடற்கரையின் மணல் நிறைந்த இடங்களில் பெண்கள் விளையாடுகின்றனர். ஒளிமிக்க அணிகளை மணல் குவியலில் புதைத்து வைத்திடுவர். அவற்றை எருமைகள் தம் கொம்புகளாலும் குளம்புகளாலும் குத்தி அணிகலன்களை வெளிப்படுத்தும் என்று தோழி கூற்று மூலம் தெரிவிக்கப்படுகின்றது.

***"புனலாடு மகளிர் இட்ட ஒள் இழை***

***மணல் ஆடு சிமையத்துஇ எருமை கிளைக்கும்***
***யாணர் ஊரன் மகள்இ இவள்***
***யாணர் நரம்பிணும் இன் கிளவியளே”***

என்ற பாடலடிகள் மூலம் பெண்கள் அணிகலன்களை கடற்கரை மணல் குவியலில் புதைந்து விளையாடும் வழக்கமும்இ அப்பெண்களுடன் எருமைகளும் சேர்ந்து விளையாடியதையும் மேற்சுட்டிய பாடலடி குறிப்பிடுகிறது.

வெண்மையான மணல் நிறைந்து கடற்கரைப் பகுதி காட்சி தருகின்றன. உயர்ந்து வரும் அலைகள் கடற்கரையில் மோதி புதுமணலை உருவாக்குகின்றன.

***“அம்ம வாழி, தோழி! நென்னல்***
***ஓங்கு திரை வெண் மணல் உடைக்கும் துறைவற்கு,***
***ஊரார் ‘பெண்டு’ என மொழிய என்னை***
***அது கேட்டு, ‘அன்னாய்’ என்றனள் அன்னை,***
***பைய ‘எம்மை’ என்றனென் யானே”***

என்ற பாடலடியில் கடற்கரையில் வெண்மையாக இருக்கும் மணலுடன் அலைகள் வந்து மோதி புது மணலை சேர்ப்பது தலைவனோடு இணைத்துக் கூறப்படுகின்றது.

மற்றொரு பாடலடியில் குவிந்த வெண்மணலில் குரவைக் கூத்து நிகழ்த்தப்படுகின்றது.

***“நெய்தல் உண்கன், நேர்இறைப் பணைத் தோள்***
***பொய்தல் ஆடிய பொய்யா மகளிர்***
***குப்பை வெண் மணல் குரவை நிறூஉம்***
***துறை கெழு கொண்கன் நல்கின”***

என்று கடற்கரை வெண்மணலில் பொய்யா மகளிர் குரவை கூத்து ஆடுகின்றனர். கூத்து ஆடிடும்போது கால் வலி தெரியாமல் இருக்க குவிந்த மணில் கூத்து நிகழ்த்தப்படுவதும் மேற்சுட்டிய பாடலடியில் தெரிவிக்கப்படுகின்றது.

**குறிஞ்சி நில மலைகள்**

மணல், மணல் குன்றுகள் பற்றிய குறிப்புகள் குறிஞ்சி மலை நிலத்தில் இடம்பெறவில்லை. மலைகள், குன்றுகள், கற்கள், பாறைகள் போன்ற பதிவுகளே ஐங்குறுநூற்றுப் பாடல்களில் இடம்பெற்றுள்ளன.

குறிஞ்சி நிலத் தலைவன் நாட்டில் மலைகள் உயர்ந்தோங்கி நிற்கின்றன. அத்தகைய மலைகள் நீலமணிப் போன்ற நிறத்தில் காட்சியளிப்பதைக் கீழ்க்காணும் பாடலடி தெரிவிக்கின்றது.

***“மணி நிற மால் வரை மறைதொறு, இவள்***
***அறை மலர் நெடுங் கண் ஆர்ந்தன பனியே”***

குறிஞ்சி நிலத்தில் இருந்திடும் மலைகள் திருமாலின் நீலமணி நிறம் போன்று காட்சியளிப்பது தெரிவிக்கப்பட்டுகின்றது.

மலைகள் என்றால் நெடியதாகவும்இ தொடராகவும் காடுகள் அடர்ந்தும் இருந்திடல் வேண்டும். அவ்வகையில் குறிஞ்சி நிலத்தில் இருக்கும் மலைகள் நெடியதாக இருந்திருக்கின்றன.

***“நெடுமலை நாடன் ஊர்ந்த மாவே”***

என்று மலைகள் நெடிதாக இருத்தலே அதற்கு அழகு என்னும் பொருண்மையி;ல் இப்பாடலடி அமைகின்றது. குறிஞ்சிநிலத் தலைவன் நெடுமலை நாடனாக சுட்டப்படுகின்றான்.

குன்றுகளில் இருந்து அருவிகள் உருவாகிடும் செயல் ஐங்குறுநூற்றுப் பாடலில் இடம்பெற்றுள்ளன. மருத நிலத் தலைவன்இ குறிஞ்சி நிலத் தலைவன்இ முல்லை நிலத் தலைவன்இ நெய்தல் நிலத் தலைவன் என்று நான்கு நிலத் தலைவர்களைப் பற்றி இப்பாடல் அமைகின்றது.

***“கணங்கொள் அருவிக் கான் கெழு நாடன்***
***குறும்பொறை நாடன் , நல்வயல் ஊரன்***
***தண் கடற் சேர்ப்பன் பிரிந்தென, பண்டையின்***
***கடும் பகல் வருதி – கையறு மாலை!***
***கொடுங் கழி நெய்தலும் கூம்பக்***
***காலை வரினும் இ களைஞரோ இலரே”***

என்ற பாடலில் அருவிகள் குன்றுகளில் இருந்து வருவதையும்இ நான்கு நிலத் தலைவர்களைப் பற்றிய குறிப்பும் மேற்சுட்டிய பாடலடியில் குறிப்பிடப்பட்டுள்ளன. நான்கு நிலங்களோடு தலைவனை இணைத்து இப்பாடலில் சுட்டப்பட்டுள்ளன.

மற்றொரு பாடலில் மலைகளில் தொடர்ச்சியாக இருக்கும் தொடர் மலைகளில் இருந்து அருவிகள் உருவெடுக்கும் குறிப்பு தெரிவிக்கப்படுகின்றது.

***“அம்ம வாழிஇ தோழி நம் மலை***
***மணி நிறம் கொண்ட மாமலை வெற்பில்”***

மலைகள் இருப்பதால் மட்டுமே அருவிகள் வற்றாமல் இருக்கின்றன. அருவிகள் இல்லை என்றால் ஆறுஇ கடல் போன்ற நீர் வாழிடங்கள் வறண்டு போய்விடும் செய்தியும் சுட்டப்படுகின்றது.

**பாலை நிலம்**

பாலை நிலங்களில் மணல் குன்றுகள்இ பறவைஇ வெண்மையான மணல்இ கற்கள் பிளவு போன்று செய்திகள் இடம்பெற்றுள்ளன.

பாலை நிலங்களில் மணல் அதிகமாக இருந்தாலும் அவற்றில் சிறுசிறு குன்றுகள் அமைந்திடுகின்றன. அவற்றில் மூங்கில் மரங்கள் அருகில் வலிமையான புலிகள் வாழ்கின்ற செய்தயினைக் கீழ்க்காணும் பாடலடி விளக்குகிறது.

***“ஞெலி கழை முழங்கு அழல் வயமா வெரூஉம்***
***குன்றுடை அருஞ் சுரம் செலவு அயர்ந்தனையே;***
***நன்று இலஇ கொண்க! நின் பொருளே”***

என்ற பாடலடியில் பாலை நிலத்தின் குன்றுகள் காட்சி சித்தரிக்கப்படுகின்றது.

போகில் எனும் பறவை பாலை நிலத்தில் வாழும் என்கிறது. வெப்பநிலை பாலை நிலத்தில் அதிகமாக இருக்கும்.

***“போகில்தனைத் தடுக்கும் வேனில் அருஞ் சுரம்”***

வெப்பம் மிகுந்த மணல் பரப்பில் போகில் பறவை பறக்க முடியாமல் இருப்பதை மேற்சுட்டிய பாடலடி பதிவு செய்கின்றது.

பாலை நிலத்தில் கொடிய கோடைக் காலத்தில் வழியின் சுரங்கள் கொதித்து கிடக்கின்றன. கோடைச் சூரியனின் கதிர்கள் மலைகளை பிளக்குமாறு இருந்திடுகின்றன.

***“கடுங் கதிர் ஞாயிறு கலபகத் தெறுதலின் ,***
***வெய்ய ஆயின முன்னே இனியே***
***-----------------------------------------***
***தண்ணிய ஆயினஇ சுரத்திரை ஆறே!”***

பாலை நிலத்தில் எப்போதும் வெயிலின் தாக்கம் அதிகமாக இருப்பதால் கோடைப் பருவத்தில் கூடுதலான வெப்பத்தாக்குதல் உருவாகும். இத்தகைய வெப்பத்தால் பெரிய மலையாக இருந்தாலும் சிறிய மலையாக இருந்தாலும் பிளவுகள் ஏற்படும் என்னும் குறிப்பு மேற்சுட்டிய பாடலடியில் தெரிவிக்கப்படுகின்றது.

வெம்மையாற் காய்ந்து போன மூங்கில்கள் ஒன்றுடன் ஒன்று உரசி மோதுவதால் நெருப்பு ஏற்படுகின்றன. இத்தகைய நெருப்பு மலைகளின் கற்களை வெப்பத்தாற் பிளவுபடுத்துகின்றன.

***"முளி வயிர்ப் பிறந்தஇ வளி வளர் கூர் எரிச்***
***சுடர் விடு நெடுங் கொடி விடர் முகை முழங்கும்***
***இன்னா அருஞ் சுரம் தீர்ந்தனம் இ மென்மெல"***

என்ற பாடலடியில் மூங்கில் மரத்தால் ஏற்பட்ட தீ காற்றால் பரவி மலைகளின் கற்களை வெப்பத்தாற் உடைத்து பிளவுபடுத்தும் காட்சி சுட்டப்படுகின்றது.

**முல்லை நிலத்தின் குன்றுகள்**

முல்லை நிலம் காடும் காடு சார்ந்த பகுதியும் ஆகும். பலவகையான பூக்கள் நிறைந்த காடுகளில் சிறிய குன்றுகள் நிறைந்திருக்கும். காடுகள் மிகுதியாக சூழ்ந்திருப்பது முல்லை நிலம் என்று கூறப்படுகிறது.

***"தான் அவள் சிறுபுறம் கவையினள் - நன்றும்***
***நறும் பூந் தண் புறவு அணிந்த***
***குறும் பல் பொறைய நாடு கிழவோனே"***

என்ற பாடலடியில் பலவகையான பூக்கள் மரங்கள் சிறிய குன்றுகள் நிறைந்த நிலம் முல்லை நிலம் என்பதை மேற்சுட்டிய பாடலடி கூறுகின்றது.

முல்லை நிலத்தின் குன்றுகள் நீண்டு இருக்கும். இக்குன்றுகளில் கொன்றை மரங்கள் வளரும் என்பது பதிவு செய்யப்படுகின்றனது.

***"நெடும் பொறை மிசைய குறுங்காற் கொன்றை***
***அடர் பொன் என்னச் சுடர் இதழ் பகரும்***
***கான் கெழு நாடன் மகளே"***

குறிஞ்சி மலைக்குன்றுகளில் வேங்கை மரம் வளர்வது போன்று முல்லை நிலத்தின் குன்றுகளில் கொன்றை மரங்கள் வளர்கின்றன.

**முடிவுரை**

தொல்காப்பியர் நிலங்களை ஐந்தாக பிரிக்கின்றார். பாலைநிலம் முல்லையும், குறிஞ்சியும் திரிந்து உருவாகின. ஐவகை நிலங்களுக்குரிய நில அமைப்பினைத் தொல்காப்பியர் சுட்டியுள்ளார். இத்தகைய நில அமைப்புக் காட்சிகளை ஐங்குறுநூறு பாடல்கள் பதிவு செய்துள்ளன. ஐங்குறுநூற்றில் உள்ள ஐவகை நிலங்களான குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை பற்றி இக்கட்டுரை ஆராய்கின்றது

**குறிப்புகள்**

**1.**கார்மேகக்கோனர்.ஆ, ஐங்குறுநூற்றுச் சொற்பொழிவுகள், பக்.எண்:**7**
**2.**இளம்பூரணார், தொல்.பொருள், நூ.எண்:**5**
**3.**மாணிக்கவாசகன்.ஞா, சிலப்பதிகாரம், பா.எண்:**64**
**4.**தட்சிணாமூர்த்தி.ஆ, ஐங்குறுநூறு, பா.எண்:**19**